## கரூர் மாவட்டம்

# கிருஷ்ணராயபுரம் கிழக்கு, கிருஷ்ணராயபுரம் தெற்கு - கரூர் கிழக்கு, கரூர் வடக்கு கடவூர் வடக்கு, கடவூர் தெற்கு, கடவூர் மேற்கு - குளித்தலை கிழக்கு, குளித்தலை மேற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழக - பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம், கிருஷ்ணராயபுரம் கிழக்கு, கிருஷ்ணராயபுரம் தெற்கு ஆகிய 2 ஒன்றியக் கழகங்களாகவும் - கரூர் கிழக்கு, கரூர் வடக்கு ஆகிய 2 ஒன்றியக் கழகங்களாகவும் கடவூர் வடக்கு ஒன்றியம், கடவூர் தெற்கு ஒன்றியம் ஆகிய இரண்டு ஒன்றியங்கள் கடவூர் வடக்கு, கடவூர் தெற்கு, கடவூர் மேற்குஆகிய 3 ஒன்றியக் கழகங்களாகவும் - குளித்தலை ஒன்றியம் குளித்தலை கிழக்கு, குளித்தலை மேற்கு ஆகிய 2 ஒன்றியக் கழகங்களாகவும் பிரிக்கப்படுகின்றது.

அவ்வாறு பிரிக்கப்பட்ட கிருஷ்ணராயபுரம் கிழக்கு, கிருஷ்ணராயபுரம் தெற்கு கரூர் கிழக்கு, கரூர் வடக்கு- கடவூர் வடக்கு, கடவூர் தெற்கு, கடவூர் மேற்கு குளித்தலை கிழக்கு, குளித்தலை மேற்கு ஆகிய ஒன்றியங்களின் வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம்:** 1.சிந்தலவாடி, 2.கள்ளப்பள்ளி, 3.பிள்ளாபாளையம், 4.கருப்பத்தூர், 5.வயலூர், 6.வீரியம்பாளையம் ஆகிய 6 ஊராட்சிகள்.

**கிருஷ்ணராயபுரம் தெற்குஒன்றியம்:** 1.சிவாயம், 2.பாப்பக்காபட்டி, 3.பஞ்சப்பட்டி, 4.போத்துராவுத்தன்பட்டி, 5.கொசூர், 6.மத்தகிரி, 7.தொண்டமாங்கிணம் ஆகிய 7 ஊராட்சிகள்.

**கரூர் கிழக்கு ஒன்றியம்:** 1.காதப்பாறை, 2.மின்னாம்பள்ளிபஞ்சமாதேவி, 3.நெரூர் வடபாகம், 4.நெரூர்தென்பாகம், 5.சோமூர் ஆகிய 5 ஊராட்சிகள்.

**கரூர் வடக்கு ஒன்றியம்:** 1.புஞ்சைகடம்பஞ்குறிச்சி, 2.நன்னியூர், 3.வாங்கல் குப்புச்சிபாளையம், 4.மண்மங்கலம், 5.ஆத்தூர்பூலாம்பாளையம் ஆகிய 5 ஊராட்சிகள்.

**கடவூர் வடக்கு ஒன்றியம்:** 1.மஞ்சாநாயக்கன்பட்டி, 2.பாப்பயம்பாடி, 3.வடவம்பாடி, 4.பண்ணப்பட்டி, 5.வெள்ளப்பட்டி, 6.கீரனூர், 7.தென்னிலை ஆகிய 7 ஊராட்சிகள்.

**கடவூர் தெற்கு ஒன்றியம்:** 1.கடவூர், 2.முள்ளிப்பாடி, 3.பாலவிடுதி, 4.மாவத்தூர், 5. ஆதனூர் ஆகிய 5 ஊராட்சிகள்.

**கடவூர் மேற்கு ஒன்றியம்:** 1.செம்பியநத்தம், 2.தேவர்மலை, 3.காளையாபட்டி, 4.மேலப்பகுதி, 5.கீழப்பகுதி, 6.வரவனை, 7.தரகம்பட்டி, 8.வழ்வார்மங்கலம் ஆகிய 8 ஊராட்சிகள்.

**குளித்தலை கிழக்கு ஒன்றியம்:** 1.சூரியனூர், 2.நல்லூர், 3.மணத்தட்டை, 4.இரணியமங்கலம், 5.வைகைநல்லூர், 6.திம்மம்பட்டி, 7.சத்தியமங்கலம் ஆகிய 7 ஊராட்சிகள்.

**குளித்தலை மேற்கு ஒன்றியம்:** 1.பே.பேட்டை, 2.வதியம், 3.இனுங்கூர், 4.குமாரமங்கலம், 5.பொய்யாமணி, 6.இராஜேந்திரம் ஆகிய 6 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட கிருஷ்ணராயபுரம் கிழக்கு, கிருஷ்ணராயபுரம் தெற்கு - கரூர் கிழக்கு, கரூர் வடக்கு - கடவூர் வடக்கு, கடவூர் தெற்கு, கடவூர் மேற்கு குளித்தலை கிழக்கு, குளித்தலை மேற்கு ஆகிய ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **சி.கதிரவன்,** வரகூர், வயலூர், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.

**கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர்: **எல்.கரிகாலன்,** 6/4, பஞ்சப்பட்டிஅஞ்சல், கிருஷ்ணராயபும் வட்டம்,கரூர் மாவட்டம்.

**கரூர் கிழக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **ப.முத்துகுமார்,** பிரேம் நகர் விஸ்தரிப்பு, காதம்பாறை கிராமம், வெண்ணமலைஅஞ்சல், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம்.

**கரூர் வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **வி.கே.வேலுச்சாமி,** 2/91, சின்னவரப்பாளையம், புஞ்சைகடம்பங்குறிச்சி அஞ்சல், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம்.

**கடவூர் வடக்கு ஒன்றியம்**

செயலாளர் : **எம். ராமலிங்கம்,** கடவூர், கரூர் மாவட்டம்.

**கடவூர் தெற்கு ஒன்றியம்**

செயலாளர் : **கே.வீராசாமி (எ) சுதாகர்,** கடவூர், கரூர் மாவட்டம்.

**கடவூர் மேற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **என். செல்வராஜ்,** சிங்கம்பட்டிஅஞ்சல், கடவூர் வட்டம், கரூர் மாவட்டம்.

**குளித்தலை கிழக்கு ஒன்றியம்**

செயலாளர் : **அ.சந்திரன்,** குளித்தலை, கரூர் மாவட்டம்.

**குளித்தலைமேற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : ப.தியாகராஜன், 5/10, பொய்யாமணி, குளித்தலைவட்டம், கரூர் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 25.5.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இராயபுரம் சி. நவமணி
## மே 27 (2012)

இராயபுரம் பகுதிக் கழக அவைத்தலைவராகவும், தமிழக அனைத்து வணிகர்கள் சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"தம்பி நவமணி என்னிடம் பாசமும், நேசமும் கொண்டவர். வணிகர்கள் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினை என்றாலும் நேரில் என்னை வந்து சந்தித்து, அதுகுறித்து விவாதிக்க அவர் தவறியதே இல்லை. வணிகர்களுக்கும், கழகத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டவர்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

விழுப்புரம், மே.27- விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் ஆலோசனைக்கூட்டம் இன்று (27.05.2023 - சனிக் கிழமை) காலை 10.00 மணியளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் நடைபெற உள்ளது.

அவ்வமயம் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை மற்றும் வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றியக் குழு தலைவர்கள், துணை தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள் ஒன்றிய கவுன்சிலர்கள், நகராட்சி, பேரூராட்சி கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வினை விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக

புதியதாக சேர்ந்த உறுப்பினர்கள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டி.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளகோவில் நகராட்சி தீர்த்தாம்பாளையம் தண்ணீர்ப் பந்தலில்

# ரூ.36.44 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்ட மேம்பாட்டுப் பணி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

திருப்பூர், மே 27- திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில் ஒன்றியம், முத்தூர் பேரூராட்சியில் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறுவர் பூங்காவினை திறந்து வைத்தும், வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட தீர்த்தாம்பாளையம் மற்றும் தண்ணீர் பந்தலில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.36.44 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் குடிநீர் திட்ட மேம்பாட்டுப் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

திருப்பூர் மாவட்டம், முத்தூர் பேரூராட்சி, மகாலட்சுமி நகரில் மூலதன மானிய திட்டத்தின் கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவை திறந்து வைத்தும், வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட தீர்த்தாம்பாளையம் மற்றும் தண்ணீர் பந்தலில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.36.44 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் குடிநீர் திட்ட மேம்பாட்டுப் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாகத் துறையின் சார்பில் மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சிஅமைப்புகளை மேம்படுத்துவதும், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கடமையாகும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், உள்ளாட்சிகளை ஆளும் திறன் கொண்ட தன்னிறைவு பெற்ற நிறுவனங்களாக மேம்படுத்துவதே நோக்கமாகும். நகர்ப்புர வசிப்பிடங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி மக்கள் சிறப்பாக வாழ தகுதியான சூழ்நிலையை ஏற்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நகர்ப்புர வறுமையானது வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளது. அரசு தற்போது பல்வேறு கொள்கைகளை வகுத்து மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல, பல்வேறு உள்கட்டமை வசதிகளை செயல்படுத்தி வருகிறது. வெள்ளகோவில் நகராட்சியில் 2022-23ம் ஆண்டு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.36.44 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு தீத்தாம்பாளையம் மற்றும் தண்ணீர்பந்தல் ஆகிய பகுதியில் 1.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டி அமைக்கப்பட்டு வருகிறது. இந்த மேல்நிலைத் தொட்டியிலிருந்து சுமார் 1150 குடியிருப்புகளில் வசிக்கும் 4700 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு 270 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என அமைச்சர் தெரிவித்தார். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் குமரேசன், வெள்ளகோவில் நகராட்சி ஆணையாளர் மோகன் குமார், வெள்ளகோவில் நகராட்சி பொறியாளர் மணி மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

விழுப்புரம் வடக்குமாவட்டம் - செஞ்சி கிழக்கு ஒன்றியம்

# செஞ்சி பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி கிழக்கு ஒன்றியம், செஞ்சி பேரூர்க் கழகச் செயலாளர் காஜாநஜீர் அவர்களை, பேரூர்க் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக, **எம்.கார்த்திக்** (22, வ.உசி. தெரு, கிருஷ்ணாபுரம், செஞ்சி 604 202.) அவர்கள் செஞ்சி பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள்: 25-5-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், மே 27- நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று (27.05.2023 -சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெறுகிறது.

மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்டக் கழக துணைச் செயலாளருமான கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா குறித்து.

இளைஞர் அணி சார்பாக திராவிட மாடல் அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க தெருமுனைகூட்டங்கள் குறித்து.கழக உறுப்பினர்களை பெரும் அளவில் சேர்ப்பது குறித்து. 2023-2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தல் குறித்து.

கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
16.06.1954

மறைவு
27.05.2021

வழக்கறிஞர்
**D. பன்னீர்செல்வம்**
அவர்கள்
காரைக்குடி

**கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்...**
**எங்கள் முன்னே உங்கள் முகம்**
**எந்நாளும் உயிர் வாழும்...**

என்றென்றும் உங்கள் நினைவில்...

மனைவி : P. துளசி

மகன் : P.T. ராகேஷ் வழக்கறிஞர் | மருமகள் : S. சந்தியா ராகேஷ்